மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராணிப்பேட்டை.
முன்னிலை: திருமதி.ச.பூர்ணிமா, எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் புதன் கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 27/2022

**CNR.No.TNRP04-000257-2022**
**PARTICULARS UNDER RULE 106 OF CRIMINAL RULES OF PRACTICE, 2019:-**

| | | |
|---|---|---|
| 1. | Name of Police Station and the Crime Number of the offence | Ranipet Police Station<br>Crime No.126/2022 |
| 2. | Name | A1. Pandiyan<br>A2. Jayasudha<br>A3. Kollapuri |
| 3. | Father/Husband Name | A1. S/o.Ravi<br>A2. W/o. Pandiyan<br>A3. S/o. Ravi |
| 4. | Occupation | - |
| 5. | Residence | All are residing at No.20, Chinna Street, Ammoor, Walaja Tk, Ranipet Dt. |
| 6. | Age | - |
| 7. | Date of Occurrence | 05.03.2022 |
| 8. | Date of Complaint | 09.03.2022 |
| 9. | Date of Apprehension | A1. 09.03.2022<br>A2, A3 - AB |
| 10. | Release on bail | 10.03.2022 |
| 11. | Commitment | - |
| 12 | Commencement of Trial | 26.08.2025 |
| 13 | Closure of Trial | 24.02.2026 |
| 14 | Sentence or Order | 25.03.2026 |
| 15 | Service of copy of Judgment or finding | 25.03.2026 |



**Tmt.S.Poornima,**
**DM-cum-JM, Ranipet**

| | | |
|---|---|---|
| | on accused | |
| 16 | Explanation of delay | No delay |

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
ராணிப்பேட்டை காவல் நிலையம்,
குற்ற எண். 126/2022 ... குற்றமுறையிடுபவர்

எதிராக

A1. பாண்டியன்,
த.பெ.ரவி,
A2. ஜெயசுதா,
க.பெ. பாண்டியன்,
A3. கொள்ளாபுரி,
க.பெ. ரவி,
அனைவரின் வசிப்பிடமும்
நெ. 20, சின்ன தெரு,
அம்மூர், வாலாஜா
ராணிப்பேட்டை. ... எதிரிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் 24.05.2022 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை I அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.பாபு அவர்களும் முன்னிலையாகி நடைபெற்ற வழக்கில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

1. இவ்வழக்கு கு.வி.மு.ச பிரிவு 173(2) ன் கீழ் ராணிப்பேட்டை காவல் ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். கடந்த 05.03.2022 ம் தேதி மாலை 04.00 மணிக்கு எதிரிகள் சாட்சி–1 ஐ கடந்த



**Tmt.S.Poornima,**
**DM-cum-JM, Ranipet**

2018ம் ஆண்டு வாங்கிய வீட்டு மனையில் வீடு கட்ட ஆரம்பித்த நாளில் இருந்தே அந்த இடத்தை வாங்க முயன்று முடியாத காரணத்தினால் எதிரிகள் முன்விரோதம் கொண்டு சாட்சி–1 ஐ பொது இடத்தில் பெண் என்றும் பாராமல் தேவிடியா என்றும், சாட்சி–1க்கு பிறந்த இரண்டு குழந்தைகள் இரண்டு கலராக உள்ளதே யாருக்கு பெற்றாயோ என்று அசிங்கம திட்டியும், 1 மற்றும் 2 எதிரிகள் சாட்சி1 ஐ கைகளால் அடித்தும், 1ம் எதிரி பொது இடத்தில் பெண் என்றும் பாராமல் சாட்சி–1 ஐ இழிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தன் காலில் இருந்த செருப்பை சுழற்றி சாட்சி–1 ன் கன்னத்தில் இரண்டு முறை அடித்ததாகவும், எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 355 r/w 4 of TNPHW Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கானது கோப்புக்கு எடுக்கப்பட்டவுடன் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பபட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட வேண்டிய நகல்களை இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரிகள் குற்றம் செய்திருப்பதற்கான முகாந்திரம் இருந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 355 r/w 4 of TNPHW Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்களை பற்றி விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள்.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரை

குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்**

**அ.சா.1 பூமணி** – தன்னுடைய சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், சம்பவத்தன்று தான் தனது வீட்டில் இருந்த போது 1 ம் எதிரி தன்னை அசிங்கமாக பேசியதாகவும், எதிரிகள் மூவரும் சேர்ந்து தன்னை தெவிடியா என்று திட்டி உனது இரண்டு பிள்ளைகளும் வெவ்வேறு நிறங்களில் உள்ளது என்றும், அந்த குழந்தைகளை யாருக்கு பெற்றெடுத்தாய் என்று அசிங்கமா பேசினார்கள் என்றும், பின்பு 1ம் எதிரி அணிந்திருந்த செருப்பை கழற்றி தன்னை கீழே தள்ளி தனது கன்னம் மற்றும் தலை, முதுகு பகுதியில் செருப்பால் அடித்து தன்னை அசிங்கப்படுத்தினார் என்றும், தனது உடையை கிழித்து அசிங்கப்படுத்தினார் என்றும், தன்னிடம் தொடர்ந்து பிரச்சனை செய்து வருவதாகவும், பின்பு இது தொடர்பாக தான் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார்தான் போலீசாரிடம் தான் கொடுத்ததாகும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தான் புகார் கொடுத்த போது புகாருடன் சேர்த்து எதிரிகள் தங்களை தாக்கியதை செல்போனில் வீடியோவாக பதிவு செய்து அதை குறுந்தகடில் பதிவு செய்து புகாருடன் சேர்த்து போலீசாரிடம் ஒப்படைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.2 வளர்மதி** – தன்னுடைய சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1யை தெரியும் என்றும், சம்பவத்தன்று



Tmt.S.Poornima,
DM-cum-JM, Ranipet

ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் சண்டை ஏற்பட்டது என்றும், அப்போது திடீர் என்று 1 ம் எதிரி செருப்பை எடுத்து அ.சா.1 ன் கன்னத்தின் மீது அடித்தார் என்றும், தான் 1ம் எதிரியிடம் ஏன் அவரை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு உனக்கு ஒன்றும் தெரியாது நீ அமைதியாக இரு என்று தன்னிடம் கூறினார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.3 சங்கர்** – தன்னுடைய சாட்சியத்தில் அ.சா.1 ஐ தனக்கு தெரியும் என்றும், தனது தெருவை சேர்ந்தவர் என்றும், சம்பவத்தன்று தனது நிலத்தில் வேலை முடித்துவிட்டு அம்மூரில் சின்ன தெருவில் உள்ள தனது வீட்டிற்கு வந்த போது போலீசார் அங்கு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் விசாரித்த போது அ.சா.1ஐ எதிரி தாக்கியதாகவும், அது தொடர்பாக விசாரணை செய்து கொண்டிப்பதாகவும் தெரிவித்தனர் என்றும், தன்னிடம் அதற்கு சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதன் படி தான் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான்.

பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.4 குமார்** – தன்னுடைய சாட்சியத்தில் அ.சா.1 ஐ தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 ஐ எதிரி தாக்கியதாக கேள்விப்பட்டதாகவும், ஒரு வாரம் கழித்து அங்கு வந்த போலீசார் தன்னை விசாரணை செய்து தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் போட்டுக்கொடுத்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் ஆவணத்தில்

உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்று பகுதி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.5 இருசப்பன்** – விசாரணை அதிகாரி தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 09.03.2022 அன்று 14.30 மணியளவில் ராணிப்பேட்டை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.126/2022 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 355 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்பு அதே நாள் 15.30 மணியளவில் சம்பவ இடம் சென்று அங்கு காணப்பட்ட சாட்சிகள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதே நாள் 16.35 மணியளவில் அம்மூர் ஆலமரம் பேருந்து நிறுத்தம் அருகே மேற்குறிப்பிட்ட அதே சாட்சிகள் முன்பு வழக்கு சொத்தான வீடியோ குறுந்தகடு ஒன்றினை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும், பின்பு இவ்வழக்கின் சாட்சிகளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு அதே நாள் 17.30 மணியளவில் அம்மூர் ஆலமரம் பேருந்து நிறுத்தம் அருகே இவ்வழக்கின் 1ம் எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அந்த முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம்,

கைப்பற்றுதல் மகசர் மற்றும் குறுந்தகடு **அ.சா.ஆ.4** முதல் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.6 அண்ணாமலை** விசாரணை அதிகாரி – தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது ஆற்காடு நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 09.03.2022 அன்று ராணிப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் இருசப்பன் என்பவரால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 126/2022 என்ற வழக்கில் தனது பார்வைக்கு வைத்ததை தான் தொடர் புலன் விசாரணை மேற்க்கொண்டு விசாரணை செய்ததில் ஏற்கனவே விசாரித்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.இருசப்பன் என்பவரிடம் தெரிவித்த சங்கதிகளையே தன்னிடம் சொன்னதால் தான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், மேலும் இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 ஐ 13.03.2022 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அவ்வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்ட பிரிவுகள் 294(பி), 323, 355 இதச பிரிவை மாற்றம் செய்து 294(பி), 323, 355 r/w 4 of TNPHW Act ன் படி பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்ததாகவும், மேலும் இவ்வழக்கின் தலை மறைவான எதிரிகள் ஜெயசுதா மற்றும் கொல்லாபுரி ஆகியோர்கள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை என்றும், எனவே இத்துடன் தனது 18.03.2022 அன்று 294(பி), 323, 355 r/w 4 of TNPHW Act இ.த.ச ன் படி நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அந்த பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.



**Tmt.S.Poornima,**
**DM-cum-JM, Ranipet**

5. அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிரான சூழலை தொகுத்து பிரிவு 313(1)(ஆ) ன் கீழ் எதிரிகளிடம் வினவ எதிரிகள் அவருக்கு எதிரான சாட்சியங்கள் யாவும் பொய் சாட்சி என்றும், வழக்கை குறித்து வினவியபோது பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிப்பதற்கு சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தனர்.

6. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் அரசு தரப்பால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 355 r/w 4 of TNPHW Act ன் கீழ் குற்றச்சாட்டு அனைத்துவித ஐயப்பாட்டிற்கும் அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டதா ? இல்லையா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

7. இரு தரப்பு வாதங்களையும் கேட்டும் வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும் பார்க்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரிகளுக்கு எதிராக சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றசாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்கவேண்டுமென வாதிடப்பட்டது.

8. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில் இவ்வழக்கில் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரிகள் மீது பொய்யான ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டியவர் எனவும், எதிரிகள்



**Tmt.S.Poornima,**
**DM-cum-JM, Ranipet**

தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில் எடுத்துரைத்தார்.

9. அரசு தரப்பு வழக்கானது 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1ன் வீட்டிடம் வந்து முன்விரோதம் காரணமாக அ.சா.1 ஐ தேவிடியா என்று அசிங்கமாக பேசியும் 1 மற்றும் 2 எதிரிகள் கையால் அ.சா.1 ஐ அடித்தும் 1ம் எதிரி அ.சா.1 ஐ செருப்பை கழற்றி கன்னத்தில் இரண்டு முறை அடித்ததாகவும் ஆகவே எதிரிகள் 294(பி), 323, 355 இதச உ/இ 4 TNPHW Act ன் கீழ் குற்றம் புரிந்தார்கள் என்பதாகும்.

10. அ.சா.1 இவ்வழக்கில் காயமடைந்தவர் மற்றும் புகார்தாரர் ஆவார். அ.சா.2 கண்ணுற்ற சாட்சி. அ.சா.3 மற்றும் 4 பார்வை மகசர்கள் மற்றும் அ.சா.5 மற்றும் 6 விசாரணை அதிகாரிகள் ஆவர்.

11. அ.சா.1 காயமடைந்த சாட்சி 05.03.2022 அன்று மாலை 04.00 மணியளவில் எதிரிகள் வீட்டின் வெளியே வந்து தன்னை அசிங்கமாக பேசினார்கள் என்றும், 1ம் எதிரி தன்னை செருப்பை கழற்றி கன்னம், தலை, முதுகில் அடித்தார் என்றும், தனது உடையை 1ம் எதிரி கிழித்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அதற்காக புகார் அளித்ததாக கூறியுள்ளார். அ.சா.1 தனது உடையை 1ம் எதிரி கிழித்து கொலைமிரட்டல் விடுத்ததாக தனது சாட்சியத்தில் மிகைபடுத்தி கூறியிருந்தாலும், தன்னை 3 எதிரிகளும் அசிங்கமாக பேசினார்கள் என்றும், 1ம் எதிரி தன்னை செருப்பை கழற்றி அடித்தார் என்றும் கூறியுள்ளது அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்துள்ளது.

12. அ.சா.2 கண்ணுற்ற சாட்சியாக 05.03.2022 அன்று மாலை 04.00 மணிக்கு எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் சண்டை ஏற்பட்டது என்றும், அதில் 1ம் எதிரி அ.சா.1 ன் கண்ணத்தில் செருப்பால் அடித்தார் என்றும்,

அதனை கேட்டப்போது 1ம் எதிரி தன்னை அமைதியாக இருக்குமாறு கூறினார் என்றும் கூறியுள்ளார்.

13. அ.சா.3 மற்றும் 4 பார்வை மகசர் சாட்சிகள் ஆவர். அ.சா.3 சம்பவயிட விசாரணையின் போது தான் அங்கு இருந்ததாகவும், 1ம் எதிரி அ.சா.1 ஐ தாக்கியதற்காக போலிசார் விசாரணை செய்ததற்கு தான் சாட்சியாக இருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்ததாக கூறியுள்ளார். அ.சா.4 போலிசாரின் வேண்டுகோளின் படி கையொப்பம் செய்ததாக கூறி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.5 மற்றும் 6 ஆகியோர் விசாரணை அதிகாரிகள் ஆவர். அவர்கள் இவ்வழக்கின் புகாருடன் குறுந்தகடு பெற்றதை பற்றியும், சம்பவயிட விசாரணையை பற்றியும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததை பற்றியும், சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றதை பற்றியும் கூறியுள்ளார்கள். அ.சா.3, 5, 6 ஆகியோரின் சாட்சிகளிலிருந்து இவ்வழக்கு விசாரணையை பற்றியும், வழக்கு ஆவணங்களை தயார் செய்ததை பற்றியும் அறிய முடிகிறது.

15. இதச பிரிவு 294(பி) க்கான குற்றத்தை பற்றி பார்க்கையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் மூவரும் வந்து தன் வீட்டின் வெளியில் தன்னை அசிங்கமான வார்த்தையால் பேசியதாக கூறியுள்ள படியால் எதிரிகள் மீதான இதச பிரிவு 294(பி)க்கான குற்றம் நிரூபணம் என்று கருதப்படுகிறது.

16. அ.சா.1 மற்றும் 2 ன் சாட்சியத்திலிருந்து 1 ம் எதிரி அ.சா.1 ஐ செருப்பால் அடித்ததாக கூறியுள்ளது 1ம் எதிரி இதச பிரிவு 355 மற்றும் பிரிவு 4 of TNPHW ன் கீழான குற்றம் புரிந்துள்ளார் என்று தெளிவாகிறது.

17. எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் அ.சா.1 ஐ கையால் அடித்ததாக அரசுதரப்பு வழக்கில் அவர்கள் மீது இதச பிரிவு 323 ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும், அதனைப்பற்றி சாட்சிகள் எதுவும் கூறாத நிலையில் இந்த பிரிவிற்கான குற்றத்தை எதிரிகள் புரிந்தனர் என்று புலனாகவில்லை.

18. மேற்சொன்ன சாட்சியங்களை பார்க்கும் 1 மற்றும் 2 எதிரிகள் இதச பிரிவு 323 ன் படியான குற்றம் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் அந்த குற்றத்தை பொருத்து 1 மற்றும் 2ஆம் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

19. மேலும் போது 1 முதல் 3 எதிரிகள் இதச பிரிவு 294(பி)க்கான குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதும், 1ம் எதிரி இதச பிரிவு 355 மற்றும் பிரிவு 4 of TNPHW ன் கீழான குற்றம் புரிந்துள்ளார் என்பதும், அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே 1ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 355, மற்றும் பிரிவு 4 of TNPHW ன் குற்றம் புரிந்தும், 1 முதல் 3 வரையிலான எதிரிகள் இதச பிரிவு 294(பி)க்கான குற்றம் புரிந்திருப்பதால் அவர்களை கு.வி.மு.ச 248(2)ன் கீழ் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

20. எதிரிகளிடம் தங்களுக்கு அளிக்கப்படும் தண்டணை குறித்து வினவப்பட்ட போது எதிரிகள் தாங்கள் குற்றம் ஏதும் புரியவில்லை என்றும் தங்களுக்கு குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். இவ்வழக்கின் உண்மை தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், எதிரிகளுக்கான நன்னடத்தை அலுவலர் அளித்துள்ள அறிக்கையின் படியும் எதிரிகள் முதல் முறை

குற்றவாளி என்பதை கருத்தில் கொண்டும், எதிரிகளுக்கு குற்றவாளிகள் நன்னனத்தை சட்டம் 1958 பிரிவு 4ன் கீழான பலனை அளிப்பது பொருத்தமானது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகவே எதிரிகளை 1 வருட காலம் நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் வைக்க உத்தரவிடப்படுகிறது. நன்னடத்தை அலுவலர் அவரின் அறிக்கையை சமர்பிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

**வழக்கு சொத்து:**

இல்லை

இத்தீர்ப்புரை என் சொல்லிற்கேற்ப தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தப்பட்டு 2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 25 ஆம் தேதியாகிய இன்று திறந்த நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.

பின்சேர்க்கை

அரசு தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | பூமணி |
| அ.சா.2 | வளர்மதி |
| அ.சா.3 | சங்கர் |
| அ.சா.4 | குமார் |
| அ.சா.5 | இருசப்பன் |
| அ.சா.6 | திரு. அண்ணாமலை |



Tmt.S.Poornima,
DM-cum-JM, Ranipet

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.08.2025 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 16.09.2025 | பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 16.09.2025 | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 17.02.2026 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 17.02.2026 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 17.02.2026 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 17.02.2026 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | 17.02.2026 | குறுந்தகடு |
| அ.சா.ஆ.9 | 24.02.2026 | பிரிவு மாற்று அறிக்கை |

<u>அரசு தரப்பு சான்று பொருள்கள்</u> – இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுபொருள்</u> – இல்லை

SADASIVAM POORNIMA
Digitally signed by SADASIVAM POORNIMA
DN: cn=SADASIVAM POORNIMA, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.

<u>பின்குறிப்பு</u>

1. வழக்கின் முடிவு காவலருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
3. எந்த ஒரு சாட்சியையும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.



Tmt.S.Poornima,
DM-cum-JM, Ranipet